மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 37/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 37/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பி. மாரப்பன், பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோர் ''1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1989) இப்பேரவை நிராகரிக்கிறது'' என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''1—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப் பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1989) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு. திரு. எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1—11—1989 ஆம் தேதிய **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.**